1987 ஏப்ரல் 9]

ஊராட்சிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேநீர்த் தொட்டிகள் கட்டுதல்.

349—(* வினா எண் 12093) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் உள்ள பழைய இரும்பு மேநீர்த் தொட்டிகளை மாற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேநீர்த் தொட்டிகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் உள்ள பழைய இரும்பு மேநீர்த் தொட்டிகளுக்குப் பதிலாக சிமெண்ட் மேநீர்த் தொட்டிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சிகளுக்கு பழைய இரும்புத் தொட்டிகளை மாற்றி சிமெண்ட் தொட்டிகளாக மாற்ற திட்டமிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அரசு ஒதுக்கிய பணம் எவ்வளவு? அது மாதிரி எத்தனை தொட்டிகள் இந்த மாநிலத்திலே இருக்கின்றன? அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் எத்தனை தொட்டிகள் அவ்வாறு இருக்கின்றன என்று அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மொத்தம் 574 இரும்பு மேல்நிலைத் தொட்டிகள் இப்படிப்பட்ட முறையிலே இயங்கி வருகின்றன. ஆகவே, புதிதாக சிமெண்ட் மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க அரசு 5.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் ஒரு செயற்குறிப்பை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை தொட்டிகள் இருக்கின்றன? காட்பாடி தொகுதியில் அவ்வாறு எத்தனை தொட்டிகள் இருக்கின்றன? அவை பரிசீலனையில் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாடு பூராவும் 574 இரும்புத் தொட்டிகள். காட்பாடியும், ஆற்காடும் சேரும் என்று நான் நம்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட பழுதுபட்ட பழைய இரும்பு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை கான்கிரீட் தொட்டிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமான செயற்குறிப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கடந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்பட்டு அரசின் பரிசீலனையில் வந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய திருமங்கலம் பகுதியிலேகூட இதுமாதிரி பத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பழுதுபட்ட நிலையிலிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டே அவைகளை எடுத்துக்கொண்டு—ஏனென்றால் அந்த இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பழுதுபட்ட நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டே அவைகளை எடுத்துக் கொண்டு—அதை சிமெண்ட் கான்கிரீட் தொட்டியாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே மொத்தம் 574 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தான் இரும்புத் தொட்டிகள். அவைகளைப் பூராவும் மாற்றுவதற்குத்தான் 5.15 கோடி ரூபாய் செலவில் திட்டம் இடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அரசு விரைவிலே ஆணை பிறப்பிக்கும். ஆணை பிறப்பித்தவுடன்—இப்பொழுது இந்த வறட்சி நேரத்திலே அதையெல்லாம் செய்துவிட முடியும் என்று நான் கருதவில்லை—தொடர்ச்சியாக இந்த ஆண்டுக்குள்ளாகச் செய்து முடிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இரும்பு மேல்நிலைத் தொட்டிகளை மாற்றியமைக்கின்ற பணி இப்பொழுது பலவிடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே பலவிடங்களில் முதற்கட்டமாக டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருசில இடங்களில் மேல்நிலைத் தொட்டி அமைப்பதற்கான சிமெண்ட், இரும்புக்

1987 ஏப்ரல் 9]

கம்பி போன்ற சாதனங்கள் கிடைக்காத காரணத்தால் பணி தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவைகளை விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே சிமெண்டுக்கும், இரும்புக்கும் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. நிறையக் கிடைக்கிறது. வேறு ஏதாவது காரணங் கள் இருக்கும். அதை அறிந்து அதை நீக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

காப்டிவ் பவர் பிளான்ட் அமைத்தல்.

350—(*வினா எண் 12107) திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிப்காட் நிறுவனம் அகில உலக அளவில் டெண்டர் மூலம் Captive Power Plants அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தால் அகில உலக அளவில் டெண்டர் மூலம் கோரப்பட்ட அந்த கேப்டிவ் பவர் பிளான்ட்ஸ்க்கு ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியினுடைய அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டிற்கான காலதாமதத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஹோசூரிலும், கும்மிடிபூண்டியிலும் ஜெனரேட்டர்களை வைப்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டது. ரூ. 14.44 கோடி செலவில் ஐந்து மெகாவாட் உற்பத்தி செய்யும் நான்கு ஜென ரேட்டர்களை நிறுவி அதன் மூலம் இருபது மெகாவாட் மின் சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக